பாரதிதாசன் பல்கலை

# தொலைக்கல்வி மையத்தில் மாணவர் சேர்க்கை துவக்கம்

## புத்தகம் பெறுவதில் புதிய முறை அறிமுகம்

திருச்சி, மே 31: திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக தொலைக்கல்வி மையத்தில் 2016-17ம் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை தொடங்கப்பட்டுள்ளது. தொலைக்கல்வி மையத்தில் 18 இளநிலை, 19 முதுநிலை, 6 பட்டயப்படிப்புகள், ஒரு சான்றிதழ் படிப்பு மற்றும் 4 தொழில் சார்ந்த கல்வி படிப்புகளுக்குமாணவர்சேர்க்கை நடக்கிறது. சில இளநிலை மற்றும் முதுநிலை சிறப்பு நிலை பாடங்கள்படிப்புமையங்கள் மூலமாகவும் நடத்தப்படுகிறது. மாணவர்கள் தொலைக் கல்வி மைய அலுவலகம், பயிற்சி மையங்கள் மற்றும் படிப்பு மையங்களில் வாரத்தின் ஏழு நாட்களிலும் நேரடி சேர்க்கை பெறலாம். பல்கலைக்கழகபயிற்சிமையங்கள் மற்றும் படிப்பு மையங்களின் பட்டியல்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சேர்க்கை விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்டுள்ள மையங்களில் உரிய கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொண்டு, பூர்த்தி செய்தபின் நேரிலோ, அஞ்சல் வழியாகவே அனுப்பலாம். அல்லது இணையதளத்தின் வழியாக பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்தபின் அனுப்பலாம். இக்கல்வியாண்டிலிருந்து தொலைக்கல்வி மையத்தில் சேர்க்கை பெறும் மாணவர்கள், அச்சிடப்பட்ட புத்தகங்கள் அல்லது மின்னணு (இ-கன்டென்ட் புக்ஸ் - சிடி வடிவில்) பாடங்கள் என்ற இரண்டு பாடமுறைகளில் தங்களுக்கு வசதியான ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும்விவரங்களைதெரிந்து கொள்ள *cde.admissions@bdu.ac.in* என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யலாம் என பாரதிதாசன்பல்கலைக்கழக தொலைக்கல்வி மைய இயக்குனர் மனோகரன் தெரிவித்துள்ளார்.